தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

சார்வரி, ஆவணி 30, திருவள்ளுவர் ஆண்டு—2051

2020 செப்டம்பர் 15, செவ்வாய்க்கிழமை

சென்னை—600 002, வாலாஜா சாலை, ஓமந்தூரார் அரசினர் தோட்டம், கலைவாணர் அரங்கம், மூன்றாவது தளத்தில் உள்ள பல்வகை கூட்டரங்கத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"பெருமை உடையவர் ஆற்றுவார் ஆற்றின்
அருமை உடைய செயல்."

செய்வதற்கு முடியாத கடினமான செயல்களையும் செய்யும் முறை அறிந்து, திறம்படச் செய்து முடிக்கின்ற திறமை உள்ளவரே, பெருமை உடையவர் ஆவார்.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள். வினா வரிசை எண் 1, மாண்புமிகு உறுப்பினர் திரு. க.நா. விஜயகுமார், மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

1—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

***54318—திரு. க.நா. விஜயகுமார்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் (வடக்கு) தொகுதி, திருப்பூர் மாநகராட்சி, குமரானந்தபுரத்தில் உள்ள உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1952 ஆம் ஆண்டுக்குப் பிறகு இதே இடத்தில் இன்று சட்டமன்றப் பேரவை உங்கள் தலைமையில் நடைபெறுகிறது. இங்குள்ள அனைவரின் சார்பாக உங்களை வாழ்த்தக் கடமைப்பட்டிருக்கிறோம். இன்று பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களுடைய பிறந்த நாள். அண்ணா அவர்களின் வழியில் நடந்த புரட்சித் தலைவர், புரட்சித் தலைவர் அவர்களின் வழியில் நடந்த புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தற்போது அம்மா அவர்களின் வழியில் நடந்து கொண்டிருக்கிற மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள்; கொரோனா தொற்று காலத்தில் வீட்டிலேயிருந்து வெளியே வருவதற்கு முடியாமல் திணறிக் கொண்டிருக்கிற இந்த நேரத்தில் மக்கள் நலன் கருதி, பம்பரம் போன்று சுழன்று பணியாற்றி வருகிற நம்முடைய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள்; (மேசையைத் தட்டும் ஒலி) உலகமே முடங்கிப் போயிருந்தாலும், உங்கள் தலைமையில் தமிழக அரசு பணியாற்றி முன்னிலை வகித்து வருகிறது என்பதை உலகமே இன்று ஏற்றுக்கொண்டிருக்கிற நிலையில், உங்களை வாழ்த்தக் கடமைப்பட்டிருக்கிறோம்.

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் (வடக்கு) தொகுதி, திருப்பூர் மாநகராட்சி, குமரானந்தபுரத்தில் உள்ள உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த இயலாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க.நா. விஜயகுமார் அவர்கள்.

திரு. க.நா. விஜயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழையெளிய மாணவர்கள் எல்லாம் கல்வி கற்பதற்கு வசதியாக இந்தியாவிலேயே எந்தவொரு மாநிலத்திலும் இல்லாத வகையிலே, தமிழகத்தில் கல்விக்காக மட்டும் ஆண்டுதோறும் அதிக நிதியை ஒதுக்கி, கல்வித் துறையிலே ஒரு புரட்சியை ஏற்படுத்திய மறைந்த மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகிறேன். அம்மா

2020 செப்டம்பர் 15]

அவர்களின் வழியிலே தொடர்ந்து கல்வித் துறையிலே பல திட்டங்களைத் தந்து நல்லாட்சி நடத்தி வரும் மக்களின் முதல்வர், விவசாயிகளின் பாதுகாவலர் (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களையும், மாண்புமிகு தமிழகத்தின் துணை முதலமைச்சர் அண்ணன் திரு. ஓ.பி.எஸ். அவர்களையும் வணங்குகிறேன். பேசுவதற்கு எனக்கு வாய்ப்பளித்த தங்களையும் வணங்குகிறேன். 'கொரோனா' என்னும் பெரிய தொற்று நோயிலிருந்து தமிழக மக்களைக் காப்பாற்ற சிறப்பான நடவடிக்கைகளின்மூலம் இந்நோயைக் கட்டுப்படுத்தி, சிறப்பாக நல்லாட்சி நடத்திவரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் மாவட்டம், திருப்பூர் (வடக்கு) சட்டமன்றத் தொகுதி, திருப்பூர் மாநகராட்சி, குமரானந்தபுரத்தில் உள்ள உயர்நிலைப் பள்ளியில் ஏழைக் குடும்பத்தைச் சார்ந்த மாணவ, மாணவியர் படித்து வருகின்றார்கள். உயர் கல்வியைத் தொடர்வதற்கு இவர்கள் வெகுதூரத்திலுள்ள பள்ளிக்குத்தான் செல்ல வேண்டும். இதனால் இவர்களது கல்வி பாதிக்கப்படுகிறது. குமரானந்தபுரத்தில் உள்ள உயர்நிலைப் பள்ளியில் போதிய இட வசதியும் உள்ளது. ஆகவே, மாணவர்களின் நலன் கருதி, குமரானந்தபுரத்தில் உள்ள உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்த மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு அரசின் சார்பாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் விதி 110–ன்கீழ், 50 மேல்நிலைப் பள்ளிகள், 50 உயர்நிலைப் பள்ளிகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆகவேதான், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்விக்கு இயலாது என்று குறிப்பிட்டேன். இருந்தபோதிலும், அவருடைய பகுதியில் பெருமாநல்லூர் என்ற இடத்தில் பெண்கள் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப்

பள்ளியாகத் தரம் உயர்த்துவது குறித்த பரிந்துரை அரசுக்கு வந்திருக்கிறது. ஆகவே, அரசு கவனத்தில் எடுத்து, வருகின்ற ஆண்டில் அதை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க.நா. விஜயகுமார் அவர்கள்.

திரு. க.நா. விஜயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெருமாநல்லூரிலுள்ள அரசுப் பள்ளி பெண்களுக்கென்று பொதுவாக உள்ளது. அந்தப் பள்ளியை மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் சென்ற ஆண்டு உயர்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்தி, பெண்களுக்கென்று தனியாக பள்ளிக் கட்டடத்தைத் திறந்து வைத்தார்கள். அந்தப் பள்ளியிலே படிக்கின்ற மாணவியர் எல்லாம் கல்வி கற்கின்ற வகையிலே, அந்தப் பள்ளியை இந்த ஆண்டே மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தித் தருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஒப்புதலோடு இந்த ஆண்டே அது நிறைவேற்றித் தரப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 2, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. சுப்ரமணி, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

2—

நியாய விலைக் கடை

***55009—திரு. பெ. சுப்ரமணி:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—